பெயர்: ____________________ வகுப்பு: ________ தேதி: ____________

## உயர்நிலை 1 - 4 மரபுத்தொடர்கள்/ இணைமொழிகள்

### உயர்நிலை 1 (மரபுத்தொடர்கள்)

| | மரபுத்தொடர்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | **ஆறவமர** | நிதானமாகச் செயல்படுதல் |
| 2 | உதட்டளவு | ஒப்புக்காக / வேண்டாவெறுப்பாக |
| 3 | ஏட்டிக்குப் போட்டி | எதிர்க்கருத்துகளைக் கூறுதல் |
| 4 | ஒரு கை பார்த்தல் | சவால் விடுதல் |
| 5 | ஒளிவு மறைவு | எண்ணத்தை மறைத்தல் |
| 6 | ஓட்டைக்கை | பெருஞ்செலவாளி / அதிகமாகச் செலவு செய்பவன் |
| 7 | ஓட்டைவாய் | இரகசியத்தைக் காப்பாற்ற முடியாதவன் |
| 8 | கண் மூடித்தனம் | சிந்திக்காமல் ஒரு செயலில் ஈடுபடுதல் / அறியாமையில் இருத்தல் |
| 9 | கம்பி நீட்டுதல் | தப்பித்துச் செல்லுதல் |
| 10 | கரைத்துக் குடித்தல் | ஒன்றைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் |
| 11 | குரங்குப் பிடி | பிடிவாதமாக இருத்தல் |
| 12 | கை கழுவுதல் | வெறுத்து ஒதுக்கி வைத்தல் / விட்டுவிடுதல் |
| 13 | கையுங்களவுமாக | தவறு செய்யும்போது பிடிபடுதல் |
| 14 | சிட்டாய்ப் பறத்தல் | மிகவும் வேகமாகச் சிட்டுக்குருவியைப் போல் செல்லுதல் |
| 15 | செவி சாய்த்தல் | கூர்மையாகக் கேட்டல் |
| 16 | தட்டிக் கேட்டல் | தவறு செய்யும்போது கண்டித்தல் |
| 17 | தட்டிக் கொடுத்தல் | உற்சாகப்படுத்துதல் / தளர்வில்லாமல் இருக்கச் செய்தல் |
| 18 | தட்டிப் பறித்தல் | உரிமையைப் பறித்துக்கொள்ளுதல் |
| 19 | பம்பரமாய்ச் சுழலுதல் | விரைந்து வேலை செய்தல் |
| 20 | புத்தகப் புழு | படித்துக்கொண்டே இருப்பவர் |
| 21 | அளவளாவுதல் | காரணமின்றி உரையாடுதல் |
| 22 | கட்டுக்கதை | கற்பனைக் கதை |
| 23 | காலில் விழுதல் | மன்னிப்புக்கேட்டல் / ஆசி பெறுதல் |
| 24 | பகற்கனவு | நடவாததை எண்ணுதல் |
| 25 | பல்லைக் காட்டுதல் | கெஞ்சுதல் |
| 26 | பாட்டு வாங்குதல் | ஏச்சு வாங்குதல் |
| 27 | பிடி கொடுத்தல் | சிக்கிக் கொள்ளுதல் |
| 28 | வாலாட்டுதல் | குறும்பு செய்தல் |

## உயர்நிலை 1 (இணைமொழிகள்)

| | **இணைமொழிகள்** | **விளக்கம்** |
|---|---|---|
| 1 | அக்கம் பக்கம் | அண்மையில் / அருகில் / பக்கத்தில் |
| 2 | அருமை பெருமை | உயர்வு / சிறப்புத் தன்மை |
| 3 | அல்லும் பகலும் | இரவும் பகலும் / ஓய்வில்லாமல் உழைத்தல் |
| 4 | அன்றும் இன்றும் | கால முழுவதும் / தொடர்ச்சியாக / காலங்காலமாக |
| 5 | ஆடல் பாடல் | நடனமும் பாடலும் / ஆட்டம் பாட்டம் |
| 6 | இன்ப துன்பம் | சந்தோசமும் வேதனையும் |
| 7 | **ஈவிரக்கம்** | கருணையால் மனங்கசிதல் |
| 8 | உயர்வு தாழ்வு | உயர்ந்த நிலையும் தாழ்ந்த நிலையும் |
| 9 | ஓட்டமும் நடையும் | வேக வேகமாக |
| 10 | கண்ணீரும் கம்பலையும் | அழுகையும் கவலையும் |
| 11 | கண்ணும் கருத்தும் | மிகக் கவனமாக |
| 12 | சாக்குப் போக்கு | பொய்க் காரணம் |
| 13 | கார சாரம் | கடுமையான பேச்சு |
| 14 | நரை திரை | முதுமையின் வெளிப்பாடு |
| 15 | பழக்க வழக்கம் | அன்றாடம் செய்வது |
| 16 | பட்டம் பதவி | பொறுப்பு |

## உயர்நிலை 2 (மரபுத் தொடர்கள்)

| | **மரபுத்தொடர்கள்** | **விளக்கம்** |
|---|---|---|
| 1 | ஆணித்தரம் | உறுதியான பேச்சு |
| 2 | **ஆறப் போடுதல்** | செயலை முடிக்காமல் தள்ளிப்போடுதல் |
| 3 | **இனிக்கப் பேசுதல்** | மற்றவர் மனம் மகிழப் பேசுதல் |
| 4 | ஈடுகட்டுதல் | இழப்பைச் சரிக்கட்டுதல் |
| 5 | உரித்து வைத்தல் | ஒன்றை / ஒருவரைப் போல் இருத்தல் |
| 6 | **ஓட்டம் பிடித்தல்** | தப்பித்துக்கொள்ளுதல் |
| 7 | ஓய்வு ஒழிச்சல் இன்றி | தொடர்ச்சியாக ஒரு செயலில் ஈடுபடுதல் |
| 8 | கதை கட்டுதல் | இல்லாததைச் சொல்லுதல் |
| 9 | காக்கை பிடித்தல் | ஒருவரிடம் காரியத்தைச் சாதிக்க மிகவும் புகழ்ந்து பேசுதல் |
| 10 | காட்டிக் கொடுத்தல் | தவறுசெய்தவரைக் காட்டிக்கொடுத்தல் |
| 11 | குருட்டுப் பாடம் | பொருளறியாமல் மனனம் செய்தல் |
| 12 | கை கொடுத்தல் | முடிந்த உதவியைச் செய்தல் |

| | | |
|---|---|---|
| 13 | கொட்டமடித்தல் | அரட்டை அடித்தல் / பயனற்ற பேச்சுகளைப் பேசி நேரத்தைக் கழித்தல் |
| 14 | தட்டிக் கழித்தல் | பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தல் |
| 15 | தலையிடுதல் | ஒருவரின் பிரச்சினையில் ஈடுபடுதல் |
| 16 | தூக்கி வாரிப் போடுதல் | அதிர்ச்சி அடைதல் |
| 17 | நொடித்துப் போதல் | பெரிய இழப்பு ஏற்படுதல்- நட்டமடைதல் |
| 18 | பின் வாங்குதல் | இயலாமையை வெளிப்படுத்துதல் |
| 19 | மனக்கோட்டை கட்டுதல் | கற்பனை உலகத்தில் நீந்துதல் |
| 20 | இரட்டை வேடம் போடுதல் | நல்லவனாக நடித்தல் |
| 21 | நோட்டம் பார்த்தல் | உளவு பார்த்தல் |
| 22 | பகற் கொள்ளை | அறிந்தே ஏமாற்றுதல் |
| 23 | பஞ்சாய்ப் பறத்தல் | ஓடி மறைத்தல் |
| 24 | முதலைக் கண்ணீர் | வருந்துவது போல் நடித்தல் |
| 25 | வயிற்றிலடித்தல் | மற்றவருக்குத் தீமை செய்தல் |
| 26 | வாய் தவறுதல் | தவறுதலாகப் பேசி விடுதல் |
| 27 | வெள்ளிடை மலை | பலரும் அறிந்த உண்மை |

**உயர்நிலை 2 (இணைமொழிகள்)**

| | **இணைமொழிகள்** | **விளக்கம்** |
|---|---|---|
| 1 | உற்றார் உறவினர் | நண்பர்களும் உறவினர்களும் |
| 2 | கனவோ நனவோ | உண்மையா? பொய்யா? என்று நினைத்தல் / ஆச்சரியப்பட்டு யோசித்தல் |
| 3 | கள்ளங்கபடு | குற்றமில்லாத, மறைவில்லாமல் |
| 4 | குறுக்கும் நெடுக்கும் | முறை இல்லாமல் இருத்தல் |
| 5 | கூச்சல் குழப்பம் | சண்டை சச்சரவு |
| 6 | சட்ட திட்டம் | விதிமுறைகள் |
| 7 | சீராட்டிப் பாராட்டி | போற்றி வளர்த்து |
| 8 | சீரும் சிறப்பும் | பெருமையுடன் / செல்வாக்குடன் / புகழுடன் |
| 9 | தப்பும் தவறும் | ஈடுபடும் செயலில் பிழை புரிதல் |
| 10 | தான தர்மம் | கொடை வழங்கல் |
| 11 | நகை நட்டு | அணிகலன்கள் |
| 12 | நோய் நொடி | நோயும் பெரும் பாதிப்பும் |
| 13 | இன்னார் இனியார் | பிடித்தவர் பிடிக்காதவர் |
| 14 | ஏனோ தானோ | வேண்டா வெறுப்பாக |
| 15 | கொஞ்ச நஞ்சம் | மீதமுள்ள |
| 16 | திட்டவட்டம் | உறுதியாக |

## உயர்நிலை 3 (மரபுத் தொடர்கள்)

| | மரபுத்தொடர்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | **அவசரக் குடுக்கை** | யோசிக்காமல் ஒரு செயலில் அவசரமாக ஈடுபடுதல் |
| 2 | அள்ளியிறைத்தல் | கணக்கில்லாமல் வீண்செலவு செய்தல் |
| 3 | இடங்கொடுத்தல் | பாதிக்கும் அளவிற்கு உரிமை கொடுத்தல் / செல்லம் கொடுத்தல் |
| 4 | இரண்டுபடுதல் | பிரிவு ஏற்படுதல் / ஒற்றுமை குலைதல் |
| 5 | இழுக்கடித்தல் | குறிப்பிட்ட நேரத்தில் ஒரு செயலைச் செய்யாமல் இருத்தல் |
| 6 | எடுத்த எடுப்பில் | தொடக்கத்திலேயே / ஆரம்பித்திலேயே |
| 7 | ஒத்துப் பாடுதல் | யோசிக்காமல் ஒருவர் கருத்தை ஆமோதித்தல் |
| 8 | **ஒற்றைக்காலில் நிற்றல்** | பிடிவாதம் காட்டுதல் |
| 9 | ஓடியாடிப் பார்த்தல் | கடுமையாக ஒரு முயற்சியில் ஈடுபடுதல் / பொருளையோ குழந்தையையோ தேடுதல் |
| 10 | கக்க வைத்தல் | உண்மையை வரவழைத்தல் |
| 11 | கழித்துக் கட்டுதல் | ஒதுக்கி வைத்தல் / குழுவிலிருந்து நீக்கி வைத்தல் |
| 12 | காது குத்துதல் | ஏமாற்றி ஒரு செயலைச் செய்தல் |
| 13 | கை நனைத்தல் | விருந்து உபசரிப்பிலும் சாதாரண நிலையிலும் உணவு உண்ணுதல் |
| 14 | கையைக் கடித்தல் | தொழிலில் (வியாபாரத்தில்) நட்டமடைதல் |
| 15 | தலைமேற்கொள்ளுதல் | பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் |
| 16 | பழிவாங்குதல் | வஞ்சகம் தீர்த்தல் |
| 17 | பெயர் பொறித்தல் | நல்ல பெயர் நாட்டுதல் |
| 18 | பேச்சுக் கொடுத்தல் | பேசிப் பார்த்தல் |
| 19 | விட்டுக் கொடுத்தல் | தன்னுடையதை மற்றவருக்கு விட்டுக் கொடுத்தல் |
| 20 | வெட்டிப் பேச்சு | பயனற்ற வீண்பேச்சு |
| 21 | ஒருமுகமாக | சார்பாக |
| 22 | கன்னி முயற்சி | முதல் முயற்சி |
| 23 | கிள்ளுக்கீரை | ஏளனமாக நினைத்தல் |
| 24 | தலை முழுகுதல் | விட்டு ஒழித்தல் |
| 25 | நட்டாற்றில் விடுதல் | பாதிவழியில் கைவிடுதல் |
| 26 | நாக்கு நீளுதல் | கடுமையான வார்த்தை கூறுதல் |
| 27 | முகம் கருகுதல் | அவமானம் அடைதல் |
| 28 | வயிற்றில் புளியைக் கரைத்தல் | பயம் உண்டாதல் |

## உயர்நிலை 3 (இணைமொழிகள்)

| | இணைமொழிகள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | அரை குறை | முழுமை பெறாத |
| 2 | **அறக்கப் பறக்க** | அவசர அவசரமாக |
| 3 | ஊரும் பேரும் | பலரும் அறிந்த |
| 4 | எதிரும் புதிரும் | எதிர்ப்பாக |
| 5 | ஏழை எளியவர் | வறுமையில் வாடும் சாதாரண மக்கள் |
| 6 | ஒட்டி உலர்ந்து | உடல் மெலிந்து இருத்தல் |
| 7 | ஒப்பு உயர்வு | மிகவும் உயர்ந்த பெருமைக்குரியவர் |
| 8 | கண்டது கேட்டது | பார்த்ததும் கேட்டுத் தெரிந்ததும் |
| 9 | நன்மை தீமை | நல்லது கெட்டது |
| 10 | போரும் பூசலும் | சண்டையும் குழப்பமும் |
| 11 | மேள தாளம் | மங்கல இசைக்கருவிகளோடு வரவேற்றல் |
| 12 | வரவு செலவு | பணம் ஈட்டலும் செலவழித்தலும் |
| 13 | அரிய பெரிய | சிறந்த |
| 14 | நீக்குப் போக்கு | நெகிழ்வுத்தன்மை |
| 15 | வாடி வதங்கி | (செடிகள்) துவண்டு காணப்படுதல் |
| 16 | விண்ணும் மண்ணும் | ஆகாயமும் உலகமும் |

## உயர்நிலை 4 (மரபுத் தொடர்கள்)

| | மரபுத்தொடர்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | இட்டுக் கட்டுதல் | இல்லாததைச் சேர்த்துக் கூறுதல் |
| 2 | இடித்துரைத்தல் | உரிமையோடு கண்டித்தல் |
| 3 | ஈடேறுதல் | ஒருவரின் எண்ணம் நிறைவேறுதல் |
| 4 | **உச்சி குளிர்தல்** | மிகவும் மகிழ்ச்சி அடைதல் |
| 5 | உயிர்விடுதல் | ஒன்றை அடைவதற்கு மிகவும் பாடுபடுதல் |
| 6 | ஊர் சிரித்தல் | கேவலமாகப் பேசுதல் |
| 7 | எடுத்தெறிந்து பேசுதல் | அலட்சியப்படுத்துதல் |
| 8 | கரை கண்டவர் | நன்றாகத் தெரிந்தவர் |
| 9 | கரையேறுதல் | ஒரு நிலையிலிருந்து உயர்வடைதல் |
| 10 | கழுத்திற் கட்டுதல் | கட்டாயப்படுத்திப் பொறுப்பை அளித்தல் |
| 11 | சட்டை செய்தல் | பொருட்படுத்துதல் |
| 12 | சூளுரைத்தல் | சபதம் எடுத்தல் |
| 13 | சூறையாடுதல் | சேதம் உண்டாக்குதல் / கொள்ளையடித்தல் |
| 14 | தலையாட்டிப் பொம்மை | சுய சிந்தனை இல்லாமல் சம்மதித்தல் |
| 15 | தலையெடுத்தல் | உருவாகுதல் (வளர்ச்சி அடைந்த பின்பு) |

| | | |
|---|---|---|
| 16 | திக்கு முக்காடுதல் | திணறுதல் |
| 17 | பல்லவி பாடுதல் | சொன்னதையே மீண்டும் சொல்லுதல் |
| 18 | புளிப்புத் தட்டுதல் | பலமுறை செய்ததால் வெறுப்பு ஏற்படுதல் |
| 19 | மனந்திறந்து பேசுதல் | மறைக்காமல் கூறுதல் |
| 20 | விழி பிதுங்குதல் | வேலைப்பளுவால் திணறுதல் |
| 21 | வெள்ளை மனம் | கள்ளமற்ற உள்ளம் |
| 22 | கானல் நீர் | பொய்த்தோற்றம் |
| 23 | சக்கைப் போடு போடுதல் | சிறப்பாகச் செய்தல் |
| 24 | நெஞ்சைப் பிளத்தல் | துயரத்தால் வருந்துதல் |
| 25 | பட்டுத்தேறுதல் | அனுபவத்தால் உணர்தல் |
| 26 | முயற்கொம்பு | சாத்தியமில்லாதது |
| 27 | வாய்ப்பந்தல் | திறமையின்மையைப் பேச்சில் மறைத்தல் |

**உயர்நிலை 4 (இணைமொழிகள்)**

| | **இணைமொழிகள்** | **விளக்கம்** |
|---|---|---|
| 1 | ஈடு இணை | நிகரற்ற |
| 2 | கரடு முரடு | சீர் இல்லாத பாதை / சீர் இல்லாத மனிதன் |
| 3 | கல்வி கேள்வி | கற்கும் செல்வமும் கேட்கும் அறிவும் |
| 4 | குப்பை கூளம் | குப்பையும் தூசியும் |
| 5 | சாடை மாடை | நேரடியாகச் சொல்லாமல் சொல்வது |
| 6 | சொத்து சுகம் | நிறைவான வாழ்க்கைக்குரிய தேவை |
| 7 | மப்பும் மந்தாரம் | மழையின் அறிகுறி / கருமேகம் |
| 8 | மலரும் மணமும் | பிரிக்க முடியாத இரண்டு |
| 9 | மூலை முடுக்கு | எப்பக்கமும் |
| 10 | வம்பு தும்பு | வீண் பிரச்சினை (பேச்சு) |
| 11 | வாட்ட சாட்டம் | கம்பீரத் தோற்றம் |
| 12 | விருப்பு வெறுப்பு | பிடித்ததும் பிடிக்காததும் |
| 13 | ஓட்டை உடைசல் | பழையவை |
| 14 | நெளிவு சுளிவு | சூழ்நிலைக்கேற்ப நடத்தல் |
| 15 | முட்டி மோதி | சிரமப்பட்டு |
| 16 | வற்றி வறண்டு | நீரின்றி |